1-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருநெல்வேலி

**முன்னிலை:- திரு. V.பத்மநாபன், M.A.,M.L.,D.H.,**

1-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருநெல்வேலி

2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1- ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண்.79/2024 இல் இ.ம.எண்.2/2024**

ராஜா முத்துராமலிங்கம் ... மனுதாரர்/ வாதி

**/எதிர்/**

1. பி. முத்துராஜா

2. பி.அழகுசுந்தரம்

3. விஜயலட்சுமி

4. பெருமாள் மதிமலர்

5. கே.சண்முகதாய் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 23.09.2024 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.எஸ்.பி.கமலநாதன்**, அவர்கள் ஆஜராகியும், 5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.ஆர்.ராமகிருஷ்ணன்** அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுவை வலியுறுத்தவில்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையில் , இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரை நிலுவையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனு தபசில் சொத்தை எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் மூன்றாம் தரப்பினர்களுக்கு விற்பனை செய்து வில்லங்கம் செய்யக் கூடாது எனஅசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி உ.ந.மு. கட்டளை 39

விதிகள் 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரரால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>:

மனுதாரர் பிரதான வழக்கில் வாதியாக இருக்கிறார் . தாவா சொத்துக்கள் ஆதியில் பெருமாள் என்பவருக்கு 02.08.1985 ம் தேதியிட்ட கிரைப்பத்திரம் மூலம் அப்துல்கரீம் என்பவரிடமிருந்து கிரையம் பெற்று அவருக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வந்தது . மேற்படி பெருமாளின் சகோதரியின் மகன் தான் இம்மனுதாரர் ஆவார். கடந்த 22.02.2007 ம் தேதி எந்தவித தூண்டுதலுமின்றி மேற்படி பெருமாள் தன்னிச்சையாக நல்ல மனநிலையில், நல்ல உடல்நலத்துடன் இருக்கும் போது சாட்சிகள் முன்னிலையில் மனுதாரருக்கு ஆதரவாக தாவா சொத்தைப் பொறத்து பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார் . கடந்த 11.05.2018 ம் தேதி பெருமாள் இறந்து விட்டார் . பெருமாள் இறந்த பின்னர் மேற்படி உயில் ஊர்ஜிதத்திற்கு வந்து தாவா சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டு மனுதாரரின் அனுபவத்தில் உள்ளது.

1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் பெருமாளின் சட்டப்பூர்வமான வாரிசுகள் ஆவார்கள். தாவா சொத்தில் அவர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது . 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு அவருடைய தகப்பனார் உயில் எழுதி வைத்த விவரம் தெரியும். இந்த சூழ்நிலையில் 1ம் எதிர்மனுதாரர் கடந்த 04.08.2023 ம் தேதியிலும், 2 ம் எதிர்மனுதாரர் 05.08.2023 ம் தேதியிலும் 3, 4 எதிர்மனுதாரர்கள் 07.08.2023 ம் தேதியிலும் தாவா சொத்தில் அவர்களுக்கு உரிய பங்கை பொறுத்து 5 ம் எதிர்மனுதாரருக்கு கிரைய ஆவணங்கள் எழுதி கொடுத்துள்ளார்கள் . 5 ம் எதிர்மனுதாரர் பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட கிரைய ஆவணம் செல்லாது . அதனடிப்படையில் 5 ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது. எனவே, மனுதாரர் மேற்படி மோசடியான ஆவணங்கள் குறித்து புகார் கொடுத்து அதனடிப்படையில் மாநகர குற்றப்பிரிவில் குற்ற எண் 2/2024 ன் கீழ் குற்றவியல்

வழக்கு 07.02.2024 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது . எதிர்மனுதாரர்கள் மேற்படி வழக்கில் முன்எதிர்பார்ப்பு பிணையை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் பெற்றுள்ளார்கள். எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் பாத்தியதையை அனுபவத்தை மறுத்ததால் எதிர்மனுதாரர்களுக்கு மனுதாரர் அறிவிப்பு அனுப்பினார் . அதை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டு பொய்யான சங்கதிகள் கொண்டு பதில் அனுப்பியுள்ளார். 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் அறிவிப்பை பெற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பி விட்டார்கள் . எனவே பிரதான வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர்கள் சொத்தை எவ்வித பந்தக பாராதீனம் செய்யக் கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்க வேண்டும் . அவ்வாறு வழங்காதபட்சத்தில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டநஷ்டம் ஏற்படும்.

3) 1முதல் 4 எதிர்மனுதாரர்களைப் பொறுத்து மனுவை வலியுறுத்தவில்லை என்று மனுவில் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4. **5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்** :

மனுதாரரரின் மனு சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல . தாவா சொத்துக்கள் பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது. மனுதாரர் மேற்படி பெருமாளின் சகோதரியின் மகன் அல்ல . 5 ம் எதிர்மனுதாரரின் கணவரின் சகோதரர் மனுதாரர் ஆவார் . மனுதாரரின் தகப்பனார் பெயர் நீலகண்டத்தேவர். தாயார் பெயர் முத்தம்மாள். பெருமாளின் தகப்பனாரின் பெயர் சுடலைமுத்து. மேற்படி சுடலைமுத்துக்கு 4 மகன்கள் மற்றும் 3 மகள்கள். அவர்கள் முறையே இசக்கிமுத்து தேவர் , ராமையா தேவர், பரமசிவ தேவர், பெருமாள், பொன்னம்மாள், பேச்சித்தாய் மற்றும் இசக்கித்தாய் ஆவார்கள் . முத்தம்மாள் எந்த வகையிலும் பெருமாள் குடும்பத்திற்கு தொடர்பு உடையவர் அல்ல . பெருமாளுக்கு 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மகன்கள் மற்றும் மகள்கள் ஆவார்கள் . அவர்கள் தான் பெருமாளை கவனித்து வந்தார்கள் . மனுதாரர் குறிப்பிடும் உயிலை தான் எழுதி வைத்ததாக பெருமாள் கூறியது கிடையாது . பெருமாள் அவருடைய வாரிசுகள்

சமமாக சொத்துக்களை பெற வேண்டும் என்று விரும்பினார் . பெருமாள் இறந்த பின்னர் தாவா சொத்துக்கள் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது. அதன் பின்னர் 3 பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரங்கள் மூலம் அவரவருடைய பங்கை 5ம் எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்து 5ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் பாத்தியதாரர் ஆவார். சொத்தை கிரையம் பெறும் போது தாய் பத்திரம் தொலைந்து விட்டதாக 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் கூறினார்கள். தற்போது தான் மனுதாரர் திருடியுள்ளார் என்று தெரியவருகிறது . தவறான முகவரிக்கு மனுதாரர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மனுதாரர் குறிப்பிடும் உயிலில் உள்ளது பெருமாளின் கையெழுத்து அல்ல. அது மோசடியாக தாயார் செய்யப்பட்டது ஆகும் . எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

5. இம்மனுவில் தீர்வுக்கு எழும் பிரச்சனை யாதெனில்,

மனுதாரர் மனுவில் கோரும் பரிகாரம் மனுதாருக்கு கிடைக்கக் கூடியதா ? என்பதே ஆகும்.

6. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் 1 முதல் 14 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன . எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. **பிரச்சனை** :

மனுதாரர் பிரதான வழக்கில் வாதியாக இருக்கிறார் என்பதும் எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகளாக இருக்கிறார்கள் என்பதும் பிரதான வழக்கானது தாவா சொத்து மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து அதன் தொடர்ச்சியாக தபசில் சொத்தை வாதி அனுபவம் செய்வதை பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக் கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மேலும் 04.08.2023 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி 5 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரமும், 05.08.2023 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி 5 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரமும், 07.08.2023 ம் தேதி 3 ம்

பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரமும் செல்லத்தக்தல்ல என விளம்புகை பரிகாரமும் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் இந்த மனுவின் சந்தர்ப்பங்களில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாக உள்ளது.

8. தாவா சொத்து ஆதியில் பெருமாள் என்பவருக்கு கிரையம் மூலம் பாத்தியம் என்பதும் பெருமாளின் சட்டபூர்வமான வாரிசுகள் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 4 பிரதிவாதிகள் என்பதும் மறுக்கப்படாத சங்கதிகளாக உள்ளது. மேலும், கடந்த 11.05.2018ம் தேதி பெருமாள் இறந்து விட்டார் என்பதும் இம்மனுவின் சந்தர்ப்பங்களில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக உள்ளது.

9. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையின் போதும் மற்றும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமான வாக்குமூலத்தில் தாவா சொத்தின் உரிமையாளராக இருந்த பெருமாள் தாவா சொத்தைப் பொறுத்து மனுதாரர் பெயருக்கு 22.02.2007ம் தேதி நல்ல மனநிலையில் பிறர் தூண்டுதலின்றி ம.சா.ஆ.2 உயில் எழுதி வைத்திருப்பதாகவும் அவர் 11.05.2018ம் தேதியில் இறந்த பின்னர் ம.சா.ஆ.2 உயில் ஊர்ஜிதத்திற்கு வந்து அதனடிப்படையில் தாவா சொத்தை மனுதாரர் அடைந்து அனுபவம் செய்து வருவதாகவும் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு மனு சொத்தில் பாத்தியதையோ அனுபவமோ இல்லாத நிலையில் மோசடியாக அவர்களுடைய பங்கை பொறுத்து 5ம் எதிர்மனுதாரர் பெயரில் கிரைய ஆவணங்கள் எழுதிக் கொடுத்திருப்பதைப் பொறுத்து மனுதாரர் குற்றவியல் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் 5ம் எதிர்மனுதாரர் சொத்துக்களை பந்தக பாராதீனம் செய்ய முயற்சிப்பதாகவும் கூறியுள்ளார்.

10) 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி சங்கதிகள் குறிப்பாக மறுக்கப்பட்டு பெருமாள் ம.சா.ஆ.2 உயில் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றும் பெருமாள் இறந்த பின்னர் தாவா சொத்துக்கள் 1 முதல் 4

எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டு அவர்களுடைய பங்கை பொறுத்து 5ம் எதிர்மனுதாரர் பெயருக்கு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்ததாக கூறியுள்ளார்.

11. தாவா சொத்தானது மனுதாரருக்கு பெருமாள் எழுதி வைத்ததாக சொல்லப்படும் 22.02.2007 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட ம.சா.ஆ.2 உயில் அவர் இறந்த பின்னர் ஊர்ஜிதத்திற்கு வரப்பெற்று மனுதாரர் அனுபவம் செய்து வருவதாக குறிப்பாக கட்சி செய்துள்ளார். மேற்படி உயிலின் உண்மை தன்மையானது எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பாகவும், கடுமையாகவும் மறுக்கப்பட்டுள்ளது. மனுதாரர் குறிப்பிடும் உயிலை நல்ல மனநிலையில் பிறர்தூண்டுதலின்றி தாவா சொத்துக்களை மனுதாரருக்கு பாத்தியப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் பெருமாள் எழுதி கொடுத்தாரா? இல்லையா? என்பது குறித்து இம்மனுவின் சந்தர்ப்பங்களில் தீர்வு காண இயலாது. அது குறித்து பிரதான வழக்கின் இருதரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னர் விசாரணையின் முடிவில் தான் தீர்வு காண இயலும். அதேசமயத்தில் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தாவாசொத்தை 5ம் எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்துள்ளதாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் கட்சி செய்யப்பட்டுள்ளது.

12. மனுதாரருக்கு தாவா சொத்தின் ஒப்புக்கொள்ளப்பட்ட உரிமையாளரான பெருமாள் எழுதி வைத்ததாக கூறும் ம.சா.ஆ.2 உயில் பற்றி பிரதான வழக்கின் முடிவில் தான் தீர்மானிக்க முடியும் என்ற நிலையில் எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தை ஏற்றுக்கொண்டு ஒருகால் இந்த நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் அதை சாதகமாக எடுத்துக் கொண்டு 5ம் எதிர்மனுதாரர் சொத்துக்களை பந்தகபாராதீனம் செய்து விட்டால் பிரதான வழக்கில் விசாரணையின் முடிவில் ஒருகால் மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பாகும்பட்சத்தில் அதனால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டநஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. அவ்வாறு பந்தக பராதீனம் செய்து விட்டால் தாவா சொத்தைப் பொறுத்து பல்வேறு வழக்கு நடவடிக்கைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. அதேசமயத்தில் மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்டநஷ்டம் ஏற்படப் போவதில்லை.

13. மேற்படி சங்கதிகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு பார்க்கும் போது இம்மனுவின் மனுதாரருக்கு முதல்நிலை தோற்ற வழக்கும், சமநிலை நோக்கும் ஆதரவாக உள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

14. மேற்படி சங்கதிகள் அனைத்தையும், நீதியின் நலனையும் கருத்தில் கொண்டு பார்க்கும் போது மனுதாரருக்கு மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவில், இம்மனு 5ம் எதிர்மனுதாரருக்கு எதிராக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. 1 முதல் 4 எதிர்மனுதாரர்களை பொறுத்து வலியுறுத்தவில்லை என்ற அடிப்படையில் அவர்களுக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்படுகிறது . செலவுத்தொகை இல்லை.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

ஒம்/-V.பத்மநாபன்

1-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருநெல்வேலி.

**மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| 1. | 02.08.1985 | பெருமாளுக்கு அப்துல்கரீம் என்பவர் எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரத்தின் அசல் |
| 2. | 22.02.2007 | பெருமாள் மனுதாரருக்கு எழுதி வைத்த உயில் ஆவணத்தின் அசல் |
| 3. | -- | 11.05.2018 ம் தேதியில் பெருமாள் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் |

| | | |
|---|---|---|
| 4. | 04.08.2023 | 5 ம் எதிர்மனுதாரருக்கு 1 ம்எதிர்மனுதாரர் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் |
| 5. | 05.08.2023 | 5 ம் எதிர்மனுதாரருக்கு 2 ம்எதிர்மனுதாரர் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் |
| 6. | 07.08.2023 | 5 ம் எதிர்மனுதாரருக்கு 4 ம்எதிர்மனுதாரர் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் |
| 7. | 02.12.2023 | மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் நகல், அஞ்சலக ரசீதுகள் |
| 8. | 22.01.2024 | 1 ம் எதிர்மனுதாரர் அனுப்பிய பதிலறிவிப்பு |
| 9. | -- | 2 ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறையுடன் கூடிய அறிவிப்பு |
| 10. | -- | 3 ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறையுடன் கூடிய அறிவிப்பு |
| 11. | -- | 4 ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறையுடன் கூடிய அறிவிப்பு |
| 12. | -- | 5 ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறையுடன் கூடிய அறிவிப்பு |
| 13. | -- | மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மீதும் மற்றும் 4 நபர்கள் மீது கொடுத்த புகார் மனுவின் நகல் |
| 14. | 07.02.2024 | கு.எண்.2/2024 ன் முதல் தகவல் அறிக்கை நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

ஒம்/-V.பத்மநாபன்

1-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருநெல்வேலி.

1 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,

திருநெல்வேலி

**அசல் வழக்கு எண்.79/2024 இல்**

**இ..ம.எண்.2/2024**

**சீரான/நேரிய உத்தரவு**

01.10.2024